துரிதமாக நடைபெற வேண்டுமென்கின்ற முறையிலே இந்தக் கேள்வியை நான் கேட்டிருந்தேன். அமைச்சர் அவர்களுக்கு இந்தத் தகவலை அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள். மீண்டும் இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இதைப் பரிசீலிக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிட்ட ராஜாஸ் கட்டளை கிராமத்தில் பள்ளிகூட வேலை ஏதும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதே ஊராட்சியைச் சேர்ந்த இளமதுச்சூர் என்ற கிராமத்தில் 24,000 ரூபாய் மதிப்பில் பள்ளிக்கூட வேலை நடந்து வருகிறது. அந்த வேலையை ஏற்றுக் கொண்ட ஒப்பந்தகாரர் குறித்த காலத்தில் முடிக்கவில்லை என்று சொல்லப்பட்டது. ஆனால் இப்போது சுவர் எழுப்பி, கூரை மூடப்பட்டிருக்கின்றது என்ற தகவல் வந்திருக்கிறது.

## மகனூர்பட்டி ஊராட்சி சாலை.

*வினா எண் 138.—திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், மகனூர்பட்டி ஊராட்சிக்குட்பட்ட தாவுத்கொட்டாய், ஒதட்டன்கொட்டாய், பாபீபாஸ் கொட்டாய், முசிலிக் கொட்டாய், பட்லாஸ் கொட்டாய் ஆகிய கிராமங்களுக்கு போடப்பட்ட ஊராட்சிப் பாதை போக்குவரத்துக்கு ஏற்ப செப்பனிடாமலும், பட்டா தாரர்கள் ரோட்டை ஆக்கிரமித்துள்ளதாலும் லாரி வண்டி போக்குவரத்து வெகுவாக பாதிக்கப்பட்டு உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுத்த நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்புகளை அகற்றி சாலையை மேலும் சீராக்கி செப்பனிட ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றிய ஆணையரால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, மகனூர்பட்டி ஊராட்சியில் தாவுத் கொட்டாய் மற்றும் உள்ள கிராமங்களுக்குச் செல்லும் சாலையை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களை அப்புறப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டதற்கு நன்றி. இந்த நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

078 செப்டம்பர் 11]

ஏனென்ருல், உன்ளபடியே அந்த ஐந்து கிராமங்களிலும் முஸ்லீம் மக்களே பெரும்பாலும் இருக்கின்ருர்கள். அந்த கிராம மக்களுக்கு அங்கே போக்குவரத்துத் தடையாக இருப்பதால், பெண்கள் கொடுக்கல் வாங்கல் பாதிக்கப்படக்கூடிய நிலை அனுதாபத்திற் குரியதாக உள்ளது. ஆகவே, உடனடியாக அங்கே போக்கு வரத்துக்கு துரித நடவடிக்கை எடுப்பதோடு, இடையேயுள்ள காட்டாறுக்கு மத்தியிலே ஒரு பாலம் கட்டுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; தலைவர் அவர்களே, போக்குவரத்துக்கு இடையூருக இருக்கின்ற காரணத்தால் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. பாலம் கட்டுவதற்கும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

குலசேகரன்பட்டணம் பேரூராட்சி.

141

* வினு எண் 139—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டம் குலசேகரன் பட்டணம் பேரூராட்சி மன்றம் இரண்டு ஊராட்சி மன்றங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வரும் பேரூராட்சி மன்றத் தேர்வில் எந்த அடிப்படையில் தலைவர் தேர்வு நடைபெறும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம். தேர்தலுக்கு பின் நடைமுறைக்கு வரும்.

(ஆ) ஒவ்வொரு ஊராட்சிக்கும் தலைவர் தேர்ந்தெடுக்கப் படுவர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள்.

* வினு எண் 140 :—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளைக் கட்டித் தர மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகற்புற வளர்ச்சி கார்ப்ரேஷனிடமிருந்து (ஹட்கோ) உதவியினை தமிழ்நாடு அரசு கோரியுள்ளதா ?—

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) வினு எழவில்லை.